அன்பான வாடிக்கையாளர்களே

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அநுசரித்து, உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கித்தொழில் உற்பத்திகளை / சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடய ஆவணங்களைக் (KFD) கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் தனிப்பட்ட வங்கித்தொழில் வாடிக்கையாளர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற கணக்குடன் தொடர்புபட்ட விசேட பொதிகள் அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுடனும் சேர்த்து வேறுபட்ட வகையான இலங்கை ரூபாய் கணக்குகள் பற்றிய விரிவான விபரங்களை முக்கிய விடய ஆவணம் உங்களுக்கு தருகின்றது.

எனினும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுக்கும் வங்கியின் கொள்கைகளில் அத்துடன் நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் அமைவாக முக்கிய விடய ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திருத்தத்திற்கு உட்படும் என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்களாயின், பின்வரும் வழிகள் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள் www.nationstrust.com அல்லது 24 மணி நேர அழைப்பு நிலையம் 011 4 711411.

கீழே தரப்பட்டுள்ள எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில், தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை **The Complaints Resolution Officer, Nations Trust Bank PLC, 242, Union Place, Colombo 2** என்ற முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசி வாயிலாக **[+94(0)11 4711411]**/ **[customerservice@nationstrust.com]** என்ற மின்னஞ்சல் ஊடாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், உங்களுக்கு நாம் விரைவாக பதிலளிப்போம்.

| கணக்கு பற்றிய விபரம் | வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள் | விசேட வகை கட்டணங்கள் மற்றும் வேறு வங்கி அறவீட்டு | கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| அ. சேமிப்புக் கணக்குகள் | | | | |
| **நேஷன்ஸ் டெக்ஸ் பிளான்னர்**<br><br>**சேமிப்புக் கணக்குகள்**<br><br>இது, வட்டியுடைய கணக்கொன்றாகும்.<br><br>காலாண்டு கூற்றுகளை வாடிக்கையாளரின் தெரிவுக்கேற்ப அஞ்சல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் வங்கி வழங்கும். | ரூ. 2000 இற்கு மேற்பட்ட மீதிகளுக்கு 2.5 % கொண்ட வட்டி வீதம்.<br>இணையவழி மற்றும் மொபைல் வங்கிச்சேவை வசதி<br><br>வரிக் கொடுப்பனவுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கொடுப்பனவுக் கட்டளை வழங்குவதற்கு 50% கட்டணத் தள்ளுபடி.<br><br>குறைந்தபட்ச மீதியினை பேணத் தேவையில்லை. | ரூ 100/- தவணைக் கொடுப்பனவு அனுப்பாமையினைத் தவிர்ப்பதற்கு ரூ. 2,000 கொண்ட குறைந்தபட்சத் தொகை மாதாந்த அடிப்படையில் நேஷன்ஸ் டெக்ஸ் பிளான்னர் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றல்செய்யப்பட வேண்டும். | சேமிப்பு வைப்புகளுக்கான வங்கியின் கணக்கு ஆரம்பிக்கும் நியமப் படிவம் பூர்த்திசெய்யப்பட்டு பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து ஏதேனும் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>▪ தேசிய அடையாள அட்டையின் பிரதி/செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br>▪ வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் இருந்து வேறுபடுமாயின், முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும். | தகைமைபெறுகின்ற ஆட்கள்:<br><br>▪ செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை/ கடவுச்சீட்டை வைத்திருக்கின்ற அத்துடன் இலங்கையில் வதிகின்ற 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கை தேசத்தவர்கள்.<br><br>▪ குறைந்தபட்ச ஆரம்ப வைப்பு ரூ. 2,000 ஆகவிருத்தல் வேண்டும்.<br><br>▪ காலத்திற்கு காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் வட்டி ஒன்றுசேரும் என்பதுடன் வங்கியின் தற்றுணிபில் திருத்தத்திற்கு உட்படும்.<br><br>▪ வட்டியானது நாளாந்தம் கிடைக்கப்பெறுகின்ற மீதியின் அடிப்படையில் கணிக்கப்பட்டு மாத இறுதியில் கணக்கிற்கு வரவு வைக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| **நேஷன்ஸ் டெக்ஸ் பிளான்னர்**<br><br>**நடைமுறைக் கணக்குகள் (Current Account)**<br><br>இது, வட்டியற்ற கணக்கொன்றாகும் என்பதுடன் வங்கியின் பொதுவான நடமுறைக் கணக்காகும். இந்நடைமுறைக் கணக்கிற்கு மேலதிகப்பற்று மற்றும் மேலதிக தொகைகளை தானியக்கமாக மாற்றல் செய்யும் வசதி எதுவும் கிடையாது. | • காசோலைப் புத்தகம்<br>• இணையவழி மற்றும் மொபைல் வங்கிச்சேவை வசதி<br>• மாதாந்தக் வங்கிக் கூற்றுகள் | • ரூ 100/- தவணைக் கொடுப்பனவு அனுப்பாமையினைத் தவிர்ப்பதற்கு ரூ. 2,000 கொண்ட குறைந்தபட்சத் தொகை மாதாந்த அடிப்படையில் நேஷன்ஸ் டெக்ஸ் பிளான்னர் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றல்செய்யப்பட வேண்டும்.<br>• ரூ. 1000 சேவைக் கட்டணத்தை தவிர்ப்பதற்கு நடைமுறைக் கணக்கில் குறைந்தபட்ச மீதி ரூ. 10,000 பேணப்படவேண்டும். | நடைமுறை வைப்புகளுக்கான வங்கியின் கணக்கு ஆரம்பிக்கும் நியமப் படிவம் பூர்த்திசெய்யப்பட்டு அறிமுகப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் பின்வரும் ஆவணங்களுடன் சேர்த்து ஏதேனும் வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>▪ தேசிய அடையாள அட்டையின் பிரதி/செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br>▪ வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் இருந்து வேறுபடுமாயின், முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும். | தகைமைபெறுகின்ற ஆட்கள்:<br><br>▪ செல்லுபடியான தேசிய அடையாள அட்டையினை/ கடவுச்சீட்டை வைத்திருக்கின்ற அத்துடன் இலங்கையில் வதிகின்ற 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைத் தேசத்தவர்கள்.<br>▪ குறைந்பட்ச ஆரம்ப வைப்பு ரூ. 2,000 ஆகவிருத்தல் வேண்டும். |